familienbar.ch
**eltern stärken sich**

# familienbar
## பெற்றோரிடமிருந்து பெற்றோருக்கான ஒரு செயற்றிட்டம்

familienbar என்பது, பிள்ளை வளர்ப்புப் பற்றிய விடயங்களைக் கலந்துரையாடுவதற்குரிய ஒரு மேடை: பெற்றோரிடமிருந்து பெற்றோருக்கு

- பெற்றோர் ஒருவரிடமிருந்து ஒருவர் கற்பதுடன், பிள்ளை வளர்ப்பில் பாதுகாப்பையும் வென்றெடுக்கின்றனர்
- பெற்றோர் தமக்கிடையில் தொடர்பைப் பலப்படுத்துவதுடன், ஒருவருக்கொருவர் ஆதரவளிக்கின்றனர்
- பெற்றோர் கல்வி-ஆலோசனை வாய்ப்புகள் பற்றிய ஆழமான தகவல்களைப் பெறுகின்றனர்

familienbar – அனைத்துப் பெற்றோரையும் சிந்திக்கச் செய்யும், பிள்ளை வளர்ப்புப் பற்றிய அன்றாட விடயங்களிலிருந்து, கலந்துரையாடலுக்கான விடயம் பெறப்படும். சமகால விடயங்களை www.familienbar.ch. என்னும் இணையத்தளத்தின் கீழ் நீங்கள் காணலாம்.

familienbar-கலந்துரையாடல் வட்டம் எப்போதும் ஒரேமாதிரி நடைபெறும்

- 6-8 பெற்றோர் ஒருவருடைய வீட்டிலோ, ஒரு பாடசாலையிலோ அல்லது ஒரு சங்கத்திலோ சந்திப்பர்
- ஒரு DVD படம், ஒரு கதை, ஒரு விளையாட்டு ...போன்ற இவற்றுடன் விடயத்தை ஆரம்பிப்பர்
- familienbar க்கூடாகப் பயிற்றப்பட்டு, கண்காணிக்கப்பட்ட நிகழ்ச்சித் தொகுப்பாளர், அன்றாட வளர்ப்புச் சம்பந்தமாகப் பரிமாறப்படும் குறிப்புக்கள், தந்திரங்கள் பற்றிய கலந்துரையாடலை வழிநடாத்தி, அதரவு வழங்குவார்.
- கலந்துரையாடல், சௌகரியமான ஒரு சிற்றுண்டி விருந்துடன் இணைந்திருக்கும்

familienbar லுற்சேர்ண் மாநிலத்திலிருக்கும் பெற்றோருக்கும், பிள்ளை வளர்ப்பவர்களுக்குமானது.
நாங்கள் கீழ்காணும் மொழிகளில் familienbar க்கு வாய்ப்பளிக்கின்றோம்:

- Deutsch - ஜேர்மன் மொழி
- Albanisch - அல்பானிய மொழி
- Tamilisch - தமிழ் மொழி
- Serbisch/Kroatisch/Bosnisch - சேர்பிய/குரேஷிய/பொஸ்னிய மொழி
- Portugiesisch - போர்த்துக்கீசிய மொழி
- Spanisch - ஸ்பானிய மொழி

நீங்கள் சேர்ந்து செயற்பட விரும்புகின்றீர்கள்?

- விருந்தினராக: நீங்கள் சேர்ந்து கலந்துரையாட அழைக்கப்படுவீர்கள்
- விருந்தோம்புபவராக: நீங்கள் ஏனைய பெற்றோரை உங்கள் வீட்டுக்கு அழைப்பதுடன், சிற்றுண்டி அல்லது குடிப்பதற்கு ஏதாவதொன்றைத் தயார்படுத்துவீர்கள் (நட்டஈடு Fr. 30.00)
- நிகழ்ச்சித் தொகுப்பாளராக: familienbar-கலந்துரையாடல் வட்டத்தை வழிநடாத்தும் நீங்கள், எம்மூடாகப் பயிற்றப்பட்டு, மேற்பார்வை செய்யப்படுவதுடன், அதற்கான ஊதியத்தையும் பெறுவீர்கள்.

**Info und Beratung**
Brigitte Waldis-Kottmann, Fachstelle für Suchtprävention DFI, Seidenhofstrasse 10, 6003 Luzern
Tel. 041 420 13 25 (Zentrale) info@familienbar.ch www.familienbar.ch